# இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் - 2012

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் 2012 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

**இலங்கை கணக்கீட்டு நியம இல. 02**

489,296 கியூபினை உடைய ரூபா 1,367,090,000 கிரயமான மணல் இருப்பில் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான கிரயத்தினை விட குறைந்த தேறிய பெறுமதி காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் கூட்டுத்தாபனத்தினால் தேறிய தேறக்கூடிய பெறுமதி கணிப்பீடு செய்யப்பட்டு கிரயத்தினுடன் இணக்கம் செய்யப்பட்டு ஆகக் குறைந்த பெறுமதியின் அடிப்படையில் ஆண்டின் இறுதியில் மணல் இருப்பின் பெறுமதி கணிப்பிடப்பட்டிருக்கவில்லை.

#### 1.2.2 கணக்கீட்டுக் கொள்கை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கூட்டுத்தாபனத்தின் கணக்கீட்டுக் கொள்கையின் பிரகாரம் ஒரு வருடத்தினை விட அதிக காலமாக இருந்துவரும் சகல கடன்பட்டோருக்காகவும் 100 சதவீத அறவிடமுடியாக் கடன் ஏற்பாடு செய்யவேண்டியிருந்த போதிலும் அதற்கு

முரணாக தற்போது அமுல்படுத்தப்படுகின்ற பின்வரும் செயற்திட்டங்களுக்குரிய மீதிகளும் ஐயகடனாக கருதப்பட்டிருந்தது.

| | செயற்திட்டம் | ஐயக் கடனாக கருதப்பட்ட பெறுமதி |
|---|---|---|
| i. | நகர அபிவிருத்தி அதிகார சபையினால் அமுல்படுத்தப்படுகின்ற மயூர பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுவருகின்ற 120 வீடுகளின் நிர்மாணச் செயற்திட்டம் | 3,372,049 |
| ii | நகர அபிவிருத்தி அதிகார சபையினால் அமுல்படுத்தப்படுகின்ற சாலமுல்லை 216 வீட்டு அலகுகளின் நிர்மாணச் செயற்திட்டம் | 5,207,592 |
| iii. | உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சினால் உத்தேசிக்கப்பட்ட பெலியத்த பஸ் நிலைய நிர்மாண செயற்திட்டம் | 338,939 |
| | | 8,918,580 |

### 1.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடமுடியா ஐயக் கடன் மிகையேற்பாடுகள் ரூபா 80,894,000 தொகையாக இனங்காணப்பட்டு அப்பெறுமதி ஏனைய வருமானத்தின் கீழ் கொண்டுவரப்படாமல் விற்பனைச் செலவுகளிலிருந்து கழிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் காணப்பட்ட மொத்த வியாபாரக் கடன்பட்டோர் மீதியின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 81,142,850 தொகையான ஐயக் கடன் ஏற்பாடு நிதிக்கூற்றுக்களில் தனியாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) காசுப்பாய்ச்சல் கூற்றில் உள்ளபடியாக காசுகளில் பெறப்பட்ட மற்றும் செலுத்தப்பட்ட வருமானம், செலவினம் மாத்திரம் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் காசுப்பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்ட ஆண்டிற்குரிய முதலீட்டு வருமானத்தில் தேசிய வரியான ரூபா 5,755,610 தொகை உள்ளடக்கப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(ஈ) பூர்த்தி செய்யப்பட்ட செயற்திட்டமாக காண்பிக்கப்பட்ட ரூபா 824,196,175 தொகை சில வருடங்களாக முன்கொண்டு வரப்பட்டிருந்தது. இத் தொகை அந்தந்த சொத்து வகைகளின் கீழ் மூலதனமாக்கப்படாமையினால் சொத்துக்களின் பெறுமதிகளைப் போன்றே தேவையான பதிவழித்தல்களும் கணக்குகளில் சரியாகக் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 1968 இன் 15 அம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய (திருத்தப்பட்ட) மற்றும் 1933 இன் 18 அம் இலக்க ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய (திருத்தப்பட்ட) அதிகாரச் சட்டங்களின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமையினால் ரூபா 72,803,898 தொகை ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ரூபா 9,927,804 தொகை ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு குறைத்து அனுப்பப்பட்டிருந்தது.

(ஊ) கூட்டுத்தாபனத்தின் செயற்பாடற்ற செலவினமாகக் கருக்கூடிய ரூபா 66,419,000 தொகையான பதிவழித்தல்கள் செயற்பாட்டு செலவீனமாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) ரூபா 501,354,118 பெறுமதியான காணி மூன்றாம் தரப்பினருக்கு நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்ததுடன் அதனை முதலீட்டுச் சொத்தாக வேறாகக் காண்பிக்கப்படாமல் அப்பெறுமதி ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலாவதியான ஒப்பந்தங்கள் கடன்கொடுத்தோரின் கீழ் ரூபா 1,951,675 தொகை அசாதாரண மறைமீதியை காட்டியது.

(ஐ) 2012 ஆம் ஆண்டின் நிலையான வைப்பிற்கான வட்டி சரியாகக் கணிப்பீடு செய்யப்படாமையின் காரணமாக ஆண்டிற்குரிய நிலையான வைப்பு வட்டி ரூபா 966,732 தொகை குறைவாக இறுதி நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஒ) கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக இலங்கை கடற்படை இலவசமாக ஊழியத்தை வழங்குகின்றமை அவதானிக்கப்பட்டதுடன் இறுதி கணக்குகளில் இது தொடர்பான வெளிப்படுத்தல்களோ அல்லது எவ்வித சீராக்கங்களோ மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 1.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கூட்டுத்தாபனத்தின் மொத்த வியாபரக் கடன்பட்டோர் மீதி ரூபா 369,484,746 ஆக இருந்ததுடன் அதில் 2013 திசெம்பர் அளவில் 02 தொடக்கம் 05 வருடங்கள் வரையும் 5 வருடங்களுக்கு மேலாகவும் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை முறையே ரூபா 8.1 மில்லியன் ஆகவும் ரூபா 12.5 மில்லியன் ஆகவும் இருந்தன.

(ஆ) செயற்திட்டத்திற்குரிய மதிப்பீட்டுக் கட்டணமாக 5 வருடங்களுக்கு முன்னர் வழங்கப்பட்டிருந்த ரூபா 2,000,000 தொகையான வேலை தொடக்க முற்பணத்தை தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கூட்டுத்தாபனத்தினால் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு காணி விற்பனைக்காக பெறப்பட்ட முற்பணத் தொகை ரூபா 518,528,333 ஆக இருந்ததுடன் அதில் 4 தொடக்கம் 5 வருடங்கள் வரையும் ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகவும் தீர்க்கப்படாது காணப்படுகின்ற மீதிகள் முறையே ரூபா 489,000,000 ஆகவும் ரூபா 1,163,751 ஆகவும் இருந்தன.

(ஈ) டிப்பர் வாகனத்தை வாடகைக்குப் பெறுவதற்காக செலுத்தவேண்டிய பணத்தில் நிறுத்திவைக்கப்பட்ட தொகையான ரூபா 643,875 இல் ரூபா 450,871 தொகை ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான இணங்காமைகள்

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 2006 இன் 35 ஆம் இலக்க இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபன (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் 2(அ) 4 ஆம் பிரிவு | சட்டரீதியற்ற காணி மீட்பு தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.<br>உதாரணம் :- எல் எம் - 6189 கோவை |
| (ஆ) | 1968 இன் 15 ஆம் இலக்க இலங்கை காணி மீட்பு அபிவிருத்திச் சபை அதிகாரச்சட்டத்தின் 2(ஆ) 1 ஆம் பிரிவு | இலங்கையின் சகல மாகாணங்களிலும் சேற்று நிலம் அல்லது சதுப்பு பிரதேசங்கள் தீர்மானிக்கப்பட்டு (மேல் மட்டும் தென்மாகாணங்கள் தவிர) வெளியிடப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 1985 இன் 1 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய (திருத்தப்பட்ட) அதிகாரச் சட்டத்தின் 9 (2) ஆம் இலக்க பிரிவு மற்றும் 1993 இன் 18 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டத்தின் | அடிப்படைச் சம்பளத்திற்கு மேலதிகமாக வாழ்க்கைச் செலவுப்படி, விசேட வாழ்க்கைச் செலவுப்படி, ஏனைய சமமான கொடுப்பனவுகள், விடுமுறை தின கொடுப்பனவுகள், உணவுப் படிகள் மற்றும் ஏனைய பணிக் கொடைகளையும் கவனத்திற்கொள்ள வேண்டிய போதிலும் 2008 ஆம் ஆண்டு தொடக்கம் கூட்டுத்தாபனத்தின் ஊழியர் சேமலாப நிதியம் |

| | | |
|---|---|---|
| | (திருத்தப்பட்ட) 5(1) ஆம் பிரிவு | மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு வழங்கப்பட்ட பங்களிப்பினை கணிப்பீடு செய்யும் போது மேற்கூறப்பட்ட படிகள் கவனத்திற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.5 ஆம் பிரிவு | அரசாங்கத்திற்கு அறவிடவேண்டிய பணம், பிரதான கடனாளிகளிடமிருந்து அறவிடமுடியாத சந்தர்ப்பங்களின் போது அவர்கள் தொடர்பாக பின்பற்றப்பட வேண்டிய செயற்பாடுகள் பிணையாளிகள் தொடர்பாகவும் பின்பற்றப்பட வேண்டியிருந்த போதிலும் 2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 வரை வீடமைப்புக் கடன் பெற்ற 4 உத்தியோகத்தினரிடமிருந்து ரூபா 309,035 தொகையும் இடர்கடன் பெற்ற 5 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 483,012 தொகையுமாக ரூபா 792,047 கூட்டுத்தொகையான கடன் மீதி தீர்க்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. |
| (உ) | பொது முயற்சிகள் திணைக்களத்தின் 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடீ/12 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 9.14 ஆம் பிரிவு | ஒவ்வொரு கூட்டுத்தாபனத்தினாலும் மனிதவள முகாமைத்துவத்தை மேற்கொள்கையில் ஏற்படுகின்ற பிரச்சினைகளை தீர்ப்பதற்கு சட்ட விதிகளை உள்ளடக்கிய வழிகாட்டி தயாரிக்கப்பட வேண்டும். அவ்வாறில்லையாயின் மனிதவள பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டியிருந்த போதிலும் கூட்டுத்தாபனம் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

### 1.2.6 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பொதுத் திறைசேரிச் செயலாளரின் 2010 திசெம்பர் 10 ஆந் திகதிய 01/2010 ஆம் இலக்க சலுகை மோட்டார் வாகன அனுமதிப்பத்திரம் வழங்கும் வகையில் வியாபார, சுங்கத் தீர்வை மற்றும் முதலீட்டுக் கொள்கை சுற்றறிக்கையினால் இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் உத்தியோகத்தர்களுக்கு இலங்கை வங்கியினால் சலுகை வட்டி வீதத்தின் கீழ் வாகனக் கடன் வழங்கும் செயற்பாடு தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இந்த சலுகை வட்டி வீதத்தின் கீழ் இலங்கை வங்கியின் மூலம் அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற வாகனங்கள் இறக்குமதி அனுமதிப்பத்திரம் உரித்தான கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு 11.5 சதவீத வட்டி வீதத்தில் வாகனக் கடன் வழங்கும் போது கடன் வட்டியின் 2/3 பங்கு கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படுகின்றது.

(ஆ) அதன் பிரகாரம் 2011 திசெம்பர் தொடக்கம் 2013 யூன் வரை ரூபா 3,425,937 தொகை கூட்டுத்தாபனத்தினால் அவ்வாறு செலவிடப்பட்டிருந்த போதிலும் அதற்காக உரிய அமைச்சுச் செயலாளரின் அல்லது திறைசேரிச் செயலாளரின் எவ்வித அங்கீகாரமும் பெறப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டிற்கான கூட்டுத்தாபனச் செயற்பாடுகளின் வரிக்கு முன்னரான தேறிய நட்டம் ரூபா 42,529,000 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான தேறிய இலாபம் ரூபா 393,243,000 ஆனமையால் நிதிசார் விளைவுகளில் ரூபா 435,772,000 தொகை அல்லது 111 சதவீத வீழ்ச்சி காணப்பட்டது. முன்னைய ஆண்டின் கடல் மணல் விற்பனை வருமானமான ரூபா 1,793,419,000 தொகையானது மீளாய்வாண்டின் போது ரூபா 782,550,000 வரை 56 சதவீதத்தினால் குறைவடைந்ததைப் போன்றே திறைசேரியின் வேண்டுகோளின் பிரகாரம் அரசாங்கத்தின் திரட்டிய

நிதியத்திற்கு ரூபா 75,000,000 தொகை செலுத்தப்பட்டமை நிதி விளைவுகளில் இவ்வாறான வீழ்ச்சிக்குத் தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2005 தொடக்கம் 2013 வரை சாதாரண கடல் மணல் விற்பனை அளவினை கவனத்தில் கொள்கையில் 2013 ஆம் ஆண்டில் அது முன்னைய வருடத்திற்கு ஒப்பாக 98 சதவீதம் வீழ்ச்சி அடைந்திருந்தமை அறிக்கையிடப்பட்டிருந்தது. அவ்வாறே 2013 ஆம் ஆண்டில் கொழும்பு கட்டுநாயக்க அதிவேக வீதி செயற்திட்டம் மற்றும் கரையோரப் பாதுகாப்பு திணைக்கள செயற்திட்டங்களிலிருந்து எந்த வித கடல் மணலும் கோரப்பட்டிராததுடன் அதன் பிரகாரம் எதிர்வரும் காலத்தில் கடல் மணல் விற்பனை செய்தல் பிரச்சினைகளை தோற்றுவிக்கக் கூடியதாக இருக்குமென அவதானிக்கப்பட்டது.

(ஆ) கூட்டுத்தாபனத்திற்குரிய காணியில் வீடுகளை நிர்மாணித்தல் செயற்திட்டத்திற்காக ரூபா 489,000,000 தொகையான முற்பணம் முதலீட்டாளர்களிடமிருந்து பெறப்பட்டு இரு தரப்பினருடனும் 2007 யூன் 27 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும் 6 வருடகாலம் கடந்திருந்தும் எவ்வித அபிவிருத்தியும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. உடன்படிக்கையின் பிரகாரம் முதலீட்டாளரைப் போலவே கூட்டுத்தாபனமும் நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் முதலீட்டாளர் காணியை மீளவழங்காதிருந்தால் உடன்படிக்கை பிரகாரம் 14 நாட்களுக்குள் மேற்கூறப்பட்ட தொகையினை செலுத்த வேண்டி ஏற்படும் என்பதால் தொழிற்படு மூலதனப் பிரச்சினை தோற்றம் பெறுமென அவதானிக்கப்பட்டதுடன் உடன்படிக்கையை நாளது வரையாக்குவதற்கு அல்லது பாரியளவிலான வணிகப் பெறுமதியுடைய இந்த நிலத்தை ஏனைய முதலீட்டாளருக்கு வழங்கி அதன் பிரதிபலன்களை கூட்டுத்தாபனத்தினைப் போன்றே சமூகத்திற்கும் பெற்றுக்கொள்வதற்கு கூட்டுத்தாபனம் கவனம்

செலுத்தாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் இதுவரையில் முதலீட்டாளரினால் செயற்திட்டத்தின் திட்டமிடல் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தலைவர் அறிவித்திருந்தார்.

(இ) தலவத்துகொட வாய்க்கால் திருப்பும் செயற்திட்டம் 2011 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான செயல்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் அந்த செயற்திட்டத்தின் செயல்முன்னேற்றம் 66 சதவீதமான ஆகக் குறைந்த நிலையில் காணப்பட்டதுடன் அச் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயமான ரூபா 190.80 மில்லியனுடன் ஒப்பீடு செய்த போது மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு செயற்திட்டத்திற்காக ரூபா 126.35 மில்லியன் மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது.

(ஈ) கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டம் 2012 ஆகஸ்ட் அளவில் பூர்த்தி செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் 2012 திசெம்பர் வரையிலும் அதன் பௌதீக செயலாற்றல் 42 சதவீதமாக இருந்ததுடன் ரூபா 110 மில்லியன் தொகையான மொத்த மதிப்பீட்டுக் கிரயத்தில் ரூபா 46 மில்லியன் மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது.

(உ) கொழும்பு பெரும்பாக வெள்ளத்தினைக் கட்டுப்படுத்துதல் மற்றும் சுற்றாடலை அபிவிருத்தி செய்தல் செயற்திட்டத்திற்காக கைப்பாற்றப்பட்ட பாதுகாக்கப்பட்ட காணிகளில் அனுமதியின்றி குடியேறியதாக வெளிப்படுத்தப்பட்ட 361 குடும்பங்களை அகற்றுவதற்காக கூட்டுத்தாபனம் உரிய நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.

(ஊ) மொத்தச் செலவின மதிப்பீடு செய்யப்படாத 03 செயற்திட்டங்களுக்காக 2012 ஆம் ஆண்டில் ரூபா 71.8 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1950 இன் 9 ஆம் இலக்க காணி சுவீகரித்தல் அதிகாரச்சட்டத்தின் 38(அ) இன் கீழ் அபிவிருத்திச் செயற்பாட்டிற்காக 1979 தொடக்கம் 2005 ஆம் ஆண்டு வரை கூட்டுத்தாபனத்தினால் சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்காக 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய இழப்பீட்டுப் பணம் மற்றும் வட்டிப் பணத்தின் அளவு ரூபா 539,165,624 ஆக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) உரிய பிரதேச செயலகங்களைத் தொடர்புபடுத்தி இந்த இழப்பீடுகள் செலுத்துவதைத் துரிதப்படுத்துவதற்காக முறையான நடவடிக்கைகள் எடுக்கப்படாமையின் காரணமாக வருடாந்தம் 7 சதவீதப்படி வட்டி கணிப்பீடு செய்யப்படுகின்றமையினால் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு செலுத்தவேண்டிய வட்டிப் பணத்தின் அளவு ரூபா 244,730,221 ஆக இருந்ததுடன் செலுத்த வேண்டிய மொத்த இழப்பீட்டுப் பணத்தில் 45 சதவீதம் வட்டியாக இருந்தமையும் அவதானிக்கப்பட்டது. இவ்வாறு நட்டஈட்டுப் பணத்தை பெற்றுக்கொள்வதிலுள்ள தாமதத்தின் காரணமாகவும், பெறப்படுகின்ற வட்டி வீதம் ஒப்பீட்டளவில் குறைவடைந்தமையின் காரணமாகவும் உரிய நட்டஈடு உரித்தாளிகளுக்கு பாரிய அநீதி இழைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்படுகின்றது.

(இ) அனுமதியற்ற காணி மீட்பு தொடர்பில் கிடைக்கின்ற முறைப்பாடுகள் தொடர்பாக கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் கூட்டுத்தாபனத்திற்கு அறிக்கையிடப்பட்ட முறைப்பாடுகளின் ஒட்டுமொத்தத் தகவல்களும் பின்வருமாறு இருந்தது. எவ்வாறாயினும் அனுமதியற்ற முறையில் காணி மீட்பு தொடர்பாக கூட்டுத்தாபனத்தின் பல்வேறு பிரிவுகளுக்கும் முறைப்பாடுகள் கிடைத்திருந்துதுடன் அந்த முறைப்பாடுகள் ஒரு பிரிவில் முறையாக ஒன்றுசேர்க்கப்படாத நிலைமை அவதானிக்கப்பட்டமையினால் கிடைத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கையினை சரியாகத் தீர்மானிக்க முடியாதிருந்தமையும் அவதானிக்கப்படுகின்றது

| | கிடைத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை | |
|---|---|---|
| | **2011 ஆம் ஆண்டு** | **2012 ஆம் ஆண்டு** |
| விஷேட செயற்திட்டப் பிரிவு | 554 | 459 |
| பாதுகாப்புப் பிரிவு | 417 | 837 |

மேலும் அனுமதியற்ற முறையில் காணி மீட்பு தொடர்பான விஷேட செயற்திட்டப் பிரிவிற்குக் கிடைத்த 08 முறைப்பாடுகள் தொடர்பாக அந்தப் பிரிவு நடவடிக்கை எடுத்த முறைகள் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

(i) அனுமதியற்ற காணி மீட்பு தொடர்பாக முறைப்பாடு கிடைத்ததன் பின்னர் அது பரீட்சிக்கப்பட்டு காணி மீட்பினை நிறுத்துவதற்காக முறையானதும் உடனடியானதுமான நடவடிக்கைகள் எடுக்கப்படாமை.

(ii) அனுமதியற்ற காணி மீட்பு தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்காக கடிதம் மூலம் நிறுவனத்திற்கு (உதாரணம் :- கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம், உள்ளூராட்சி நிறுவனங்கள், மாவட்டச் செயலாளர், பிரதேச செயலளர் போன்ற) அறிவித்தல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டமை.

(iii) இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 2(ஆ) 1 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படாத மாகாணங்களில் அனுமதியற்ற காணி மீட்புகளுக்காக முறையான நடவடிக்கைகள் எடுக்கப்படாமை.

(iv) அனுமதியற்ற காணி மீட்புகளுக்காக நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஏனைய நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டதன் பின்னர் பின்தொடர் நடவடிக்கை எடுத்து அதன் தற்போதைய நிலைமைகள் கண்டறியப்பட்டிருக்காமை.

(ஈ) சாலமுல்ல ‘‘சுது நெலும்புர’’ வீடமைப்பு செயற்திட்டத்திற்குரிய வாடகைத் தொகை அறவிடப்படாமை தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு வீடுகளை வழங்கும் செயற்திட்டமாக 144 வீட்டு அலகுகளை நிர்மாணிப்பதற்கு ஏறத்தாள ரூபா 88 மில்லியன் செலவிடப்பட்டு 2001 ஆம் ஆண்டின் போது அமுல்படுத்தப்பட்ட ‘‘சுதுநெலும்புர’’ வீடமைப்புச் செயற்திட்டத்தில் 113 வீடுகள் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு 30 வருட குத்தகைக்கால அடிப்படையில் வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த வீடுகளிலிருந்து உடன்படிக்கை நிபந்தனைகளுக்கு முரணாக உரித்தாக்கப்பட்டிருந்த வீடுகள் மீளவும் கூட்டுத்தாபனத்திற்கு பெறப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் இது வரையில் நிலுவைத் தவணைப் பணத்தை அறவீடு செய்வதற்காக நீதிமன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாக தலைவர் அறிவித்திருந்தார்.

(ii) 02 மாதங்கள் தவணைப்பணம் செலுத்தாதிருந்த வீடுகளின் உரித்தைப் பெற்றுக்கொள்வதற்கு கூட்டுத்தாபனத்திற்கு உரிமை காணப்பட்ட போதிலும் 100 தவணைகள் அல்லது அதற்குக் கிட்டிய தவணைகள் நிலுவையாகவுள்ள வீடுகளினதும் உரித்தைப் பெற்றுக்கொள்வதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iii) உடன்படிக்கைக்கு முரணாக வீடுகளின் உள்ளே மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களுக்கு எதிராக கூட்டுத்தாபனம் எவ்வித நடவடிக்கைகளையும் எடுத்திருக்கவில்லை.

(iv) கூட்டுத்தாபனத்தின் துணைக்கம்பனியினால் அமுல்படுத்தப்பட்ட 03 வீடமைப்புச் செயற்திட்டத்தின் காரணமாக தங்களது வதிவிடங்களிலிருந்து அகற்ற வேண்டியேற்பட்ட 24 குடும்பங்களை தற்காலிகமாக குடியமர்த்துவதற்காக

அக்கம்பனியின் கோரிக்கையின் பிரகாரம் 24 வீடுகள் வழங்கப்பட்டிருந்ததுடன் அவ்வாறு வீடுகளை வழங்கும் போது கூட்டுத்தாபனம் உரிய கம்பனியுடன் எழுத்துமூல உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருக்கவில்லை.

(v) துணைக்கம்பனியிலிருந்து வீடுகள் வழங்கப்பட்ட நபர்கள் அந்த வீடுகளை மூன்றாம் தரப்பினருக்கு கையளித்திருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. தற்போது கம்பனி கலைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றமையினால் இந்த வீடுகளின் கிரயமான ரூபா 11,676,000 தொகையினை அறவீடு செய்தல் பிரச்சினைகளுக்குரியதாக இருந்தமை கணக்காய்வின் போது மேலும் அவதானிக்கப்பட்டது.

(vi) வீடுகளில் குடும்பங்களைப் பதிவு செய்வதற்கு முன்னர் தகுதிச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்படாமையின் காரணமாக இந்தத்திட்டம் நகர சபையினால் அங்கீகரிக்கப்படாதிருந்தமையும் வெளிப்படுத்தப்பட்டது.

(vii) மேலும் நிர்மாணங்களின் பூர்த்தியிலும் தரத்திலும் குறைபாடுகள் ஆரம்பம் முதலே காணப்பட்டமையும் இந்த நிலைமையினால் குடியிருப்பாளர்கள் தவணைப்பணத்தை செலுத்தாதிருப்பதற்கு காரணமாகி இருந்தமையும் வெளிப்படுத்தப்பட்டது.

(viii) இந்த செயற்திட்டத்திற்குரிய குடியிருப்பாளர்களின் நிலுவைத் தவணைப்பணம், பெறவேண்டிய மீதியாகவும் பெறப்பட்ட தவணைப் பணம் வருமானமாகவும் கணக்கு வைக்கப்படாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. இது வரையும் பெறப்பட்ட தவணைப்பண வருமானமான ரூபா 17.6 மில்லியன் தொகை ஏனைய முற்பணப் பெறுவனவுகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட வியாபாரக் கடன்பட்டோரில் ரூபா 28,192,095 தொகையை அறவிடமுடியாக் கடனாக பதிவழிப்பதற்கு கூட்டுத்தாபனத்தினால் தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் அது

தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

(i) பொது முயற்சிகள் திணைக்களத்தினால் 2013 பெப்ரவரி 05 மற்றும் 2013 பெப்ரவரி 07 ஆந் திகதிகளில் வழங்கப்பட்ட PE/COM 4/Fin என்ற கடிதத்தின் பிரகாரம் கடன்பட்டோர்களைப் பதிவழிப்பதற்கு முன்னர் உரிய அமைச்சான அரசாங்க பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரம் பெறப்படவேண்டியமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பதிவழிக்கப்பட்ட வியாபாரக் கடன்பட்டோரில் ரூபா 11,008,989 தொகை அதாவது மொத்தமாக பதிவழிக்கப்பட்ட கடன்பட்டோரில் 39 சதவீதம் நகர அபிவிருத்தி அதிகாரசபையிலிருந்தும் ரூபா 2,553,792 தொகை அதாவது 9 சதவீதம் நீர்ப்பாசனத் திணைக்களத்திடமிருந்தும் அறவிட வேண்டிய தொகையாக இருந்ததுடன் நகர அபிவிருத்தி அதிகாரசபை 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் இலாபம் பெறுகின்ற நிறுவனமாக செயற்பட்டதுடன் நீர்ப்பாசனத் திணைக்களமும் செயற்பட்டுவருகின்ற நிறுவனமாக இருந்தது. அதன் பிரகாரம் மேற்கூறப்பட்ட இரண்டு நிறுவனங்களிலிருந்தும் அறவிடவேண்டிய ரூபா 13,542,781 தொகை அறவிடப்படாமல் பதிவழிப்பதற்கு போதிய மற்றும் ஏற்றுக்கொள்ளக் கூடிய எழுத்து மூல சான்றுகளைச் சமர்ப்பிப்பதற்குத் தவறியமையே காரணமாகும் என்பது அவதானிக்கப்படுகின்றது.

(iii) மேலும் பதிழிக்கப்பட்ட வியாபாரக் கடன்பட்டோரின் தெரிவுப் பரிசோதனைகளின் போது கடன்பட்டோர் மீதியை அறவிடுவதற்கு உரிய செயற்திட்டம் பூர்த்தியடைந்ததன் பின்னர் நியாயமான காலத்தில் உரிய நிறுவனங்களிற்கு நினைவூட்டல் கடிதம் அனுப்புதல் போன்ற போதியளவான தொடர்ச்சியான

நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தமை கணக்காய்வில் உறுதிப்படுத்தப்படவில்லை.

(iv) 2004 இன் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரத்தனப்பிட்டிய வாய்க்கால் மீளமைப்புக்காக ரூபா 509,934 தொகை அங்கீகரிக்கப்பட்டிருக்கையில் அந்தச் செயற்பாட்டிற்காக அதனைவிட பாரிய அளவிலான பணம் செலவிடப்பட்டு 2004 திசெம்பர் 8 ஆந் திகதி ரூபா 3,535,330 பெறுமதியான பட்டியல் வழங்கப்பட்டிருந்தது. இந்தச் செயற்பாட்டின் போது எந்தவித உடன்படிக்கையிலும் கைச்சாத்திடப்படாதிருந்ததுடன் வேலை ஆரம்பிப்பு முற்பணமும் பெறப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட தொகை மாத்திரம் கூட்டுத்தாபனத்திற்கு கிடைத்தமையின் காரணமாக ரூபா 3,025,396 ஆன நிலுவைத் தொகை தொடர்ந்தும் கணக்குகளில் காட்டப்பட்டு இருந்தது. இத்தொகையை பதிவழிப்பதற்கு 2012 ஆம் ஆண்டில் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் அது வரையிலும் கூட்டுத்தாபனத்தினால் கணக்குகளுக்கு ரூபா 1,135,117 தொகை மாத்திரம் கொண்டுவரப்பட்டிருந்த காரணத்தினாலும் அந்தப் பெறுமதியில் ரூபா 509,934 தொகை கிடைத்திருந்த காரணத்தினாலும் எஞ்சிய ரூபா 625,183 தொகை மாத்திரம் பதிவழிக்கப்பட்டிருந்தது.

(v) முறையான எழுத்துமூல உடன்படிக்கை/ இணக்கப்பாடு இன்றி செயற்திட்டம் அமுலாக்கப்பட்ட காரணத்தினால் எழுகின்ற கடன் மீதியை அறவீடு செய்வதற்கு சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு முடியாது பதிவழிக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாறான செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக அங்கீகாரத்தினை வழங்கிய உத்தியோகத்தர் தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விளையாட்டுச் சங்கமாக பதிவு செய்யப்படாத உரிய பிரகாரம் கணக்காய்விற்கு உட்படுத்தப்படாத கூட்டுத்தாபனத்தின் தொழிற் சங்கத்திற்கு மதாந்தம் ரூபா 15,000 வீதம் செலுத்துவதற்கும் அந்த சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட மலேசியாவில் நடைபெற்ற கிரிக்கட் சுற்றுலாவிற்கும் 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 2,050,000 தொகை கூட்டுத்தாபனத்தின் நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) 2012 ஆம் ஆண்டின் போது கூட்டுத்தாபனத்தினால் தரைப்படை, கடற்படை மற்றும் சிவில் பாதுகாப்பு படையணி பதவியணியினர்களுக்கு ரூபா 2,135,075 பெறுமதியான 361 பரிசுப் பொதிகள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. இந்தப் பரிசுப் பொதிகளை கொள்வனவு செய்வதற்காக எவ்வித முறையான கொள்வனவு வழிகாட்டல்களும் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. அந்தப் பரிசுப் பொதிகளில் ரூபா 852,645 பெறுமதியான மதுபான போத்தல்களும் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அது மதுபானம் தொடர்பான அரசாங்க கொள்கைக்கு இணங்காத நிலமையாகக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(இ) மேலும் 1990 திசெம்பர் 20 ஆந் திகதிய திறைசேரிச் செயலாளரினால் வெளியிடப்பட்ட 63 ஆம் இலக்க பொது முயற்சிகள் துறைக்கான சுற்று நிருபத்தின் பிரகாரம் பெறுமதி கவனத்திற்கொள்ளப்படாமல் சகல நன்கொடைகளும் பரிசுகளின் அளவும் அமைச்சரவை அங்கீகாரம் இன்றி வழங்கப்பட முடியாதிருந்ததுடன் அவ்வாறு அங்கீகாரமின்றி நன்கொடையாக/பரிசாக வழங்கப்படுமாயின் அது மேற்கொள்ளப்படுகின்ற நபரிடமிருந்து அல்லது தனிப்பட்ட சபையிடமிருந்து பெறுமதி மீள அறவிடப்படுதல் வேண்டும்.

(ஈ) அதற்கு மேலதிகமாக 1996 மே 21 ஆந் திகதிய நிதி, திட்டமிடல் அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்பட்ட 108 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் பிரகாரம் எந்த வழியிலும் நன்கொடைகள் அல்லது பரிசு வழங்கல்கள் மேற்கொள்ளப்படக்கூடாதென அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது.

## .4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ)

| செயற்திட்டம் | செலவினம் ரூபா மில்லியன் |
|---|---|
| இலங்கை துறைமுக அதிகாரசபையின் செயற்திட்டத்தின் மீது பேரே வாய்க்காலை அகழ்தல் செயற்திட்டம் | 8.97 |
| பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயற்திட்டமான கிரிபத்கொட களு வாய்க்கால் செயற்திட்டம் | 7.81 |
| | 16.78 |

கூட்டுத்தாபனத்தினால் ரூபா 16.78 மில்லியன் செலவிடப்பட்டு அமுல்படுத்தப்பட்ட மேற்கூறப்பட்ட செயற்திட்டங்கள் இடைநடுவில் நிறுத்திப்பட்ட காரணத்தினால் அந்தச் செயற்திட்டத்திற்காக செய்யப்பட்ட செலவினத்தில் எந்தத் தரப்பினருக்கும் எவ்விதப் பயனும் கிடைத்திருக்கவில்லை.

(ஆ) கூட்டுத்தாபனத்தினால் பல்வேறு செயற்பாடுகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு ரூபா 161,884 பெறுமதியான செய்திப் பத்திரிகை அறிவித்தல்கள் பிரசுரிக்கப்பட்டு கூறுவிலைகள் கோரப்பட்டிருந்த போதிலும் அந்தச் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. அதனால் செய்திப்பத்திரிகை அறிவித்தலுக்காக செலவிடப்பட்ட செலவினம், காகிதாதிகள் செலவினம், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கான செலவினம் என்பன பயனற்ற செலவினமாக இருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(இ) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமில்லாத காணியில் ரூபா 799,786 தொகை செலவில் நிர்மாணிக்கப்பட்ட அலுவலகக் கட்டிடம் மூலதனச் செலவினத்தின் பகுதியாக இலாப நட்டக் கணக்கில் பதிவழிக்கப்பட்டிருந்தது.

**3.5 பதவியணியினர் நிருவாகம்**

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 1,290 ஆக இருந்ததுடன் உள்ளவாறான பதவியணியினர் 1,202 ஆக இருந்தமையினால் பதவியணியினரில் 88 பதவிகளில் வெற்றிடம் ஏற்பட்டிருந்தது.

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 உள்ளகக் கட்டுப்பாடு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

முகாமைத்துவத்திற்குத் தேவையான வழிகாட்டல்கள் மற்றும் தவறுகள் நடைபெறக்கூடிய இடங்கள் தொடர்பாக வழிகாட்டல்களை வழங்கும் போது உள்ளகக் கணக்காய்வு மிகவும் முக்கியமான கருவியாகப் பயன்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் கூட்டுத்தாபனத்தின் கடமைப்பொறுப்புக்கள் விரிவடைவதற்கு ஏற்ப உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் பதவியணியினரைப் பலப்படுத்தி அவ்வாறான வெற்றிகரமான பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்வதற்கு போதியளவான கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.2 கணக்காய்வு மற்றும் முகாைமத்துவக் குழு**

கூட்டுத்தாபனத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நாளதுவரையாக கூடியிருந்த போதிலும் அதன் மூலம் எடுக்கப்பட்ட சில தீர்மானங்கள் மற்றும் பணிப்புரைகள் நடைமுறைப்படுத்தப்படாமையால் முகாமைத்துவத்தினால் நிறுவனத்தினை சரியான வழியில் நடாத்திச் செல்வதற்காக அந்தக் குழுவினை பயன்படுத்திக் கொள்வதற்கு கரிசனை செலுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம் செலவினங்களுக்கிடையே கருத்திற்கொள்ளக்கூடிய வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீடானது பயனுள்ள முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. இது தொடர்பாக அவதானிக்கப்பட்ட முக்கியமான விடயங்களில் சில கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனம் வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்காக பாதீட்டின் மூலம் எவ்வித பண ஒதுக்கீடுகளும் மேற்கொள்ளப்படாதிருந்த போதிலும் 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 35,680,000 தொகை வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) 06 செயற்திட்டங்களுக்கான மொத்தச் செலவினம் மதிப்பீடு செய்யப்படாமல் 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 73.20 மில்லியன் செலவினம் செய்யப்பட்டிருந்தது.

(இ) 2011 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்டிருந்த போதிலும் 2012 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத 15 செயற்திட்டங்களைப் போன்றே 2012 ஆம் ஆண்டிற்குரிய பாதீடு செய்யப்படாத 19 செயற்திட்டங்களும் ஆண்டின் போது அமுல்படுத்தப்பட்டிருந்தன. அதற்காக முறையே ரூபா 622.27 மில்லியன் மற்றும் ரூபா 155.77 மில்லியன் தொகைகள் செலவிடப்பட்டிருந்தன.

(ஈ) 2012 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்படாதிருந்த போதிலும் 12 செயற்திட்டங்களுக்காக ரூபா 374.03 மில்லியன் தொகை மீளாய்வாண்டில் செலவிடப்பட்டிருந்தது.

## 4.4 வருடாந்த அறிக்கையினை பாராளுமன்றத்தில் முன்வைத்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 6:5:3 இன் பிரகாரம் நிறுவனத்தினால் உரிய ஆண்டிற்குரிய வருடாந்த அறிக்கை கணக்காண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2010 ஆம் ஆண்டின் பின்னர் வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான குறைபாடுகள் அவ்வப்போது கூட்டுத்தாபனத்தின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கடன்பட்டோரிடமிருந்து பணம் அறவிடப்படுதல்

(ஆ) வாடிக்கையாளர்களிடமிருந்து முற்பணம் பெற்றுக்கொள்ளல்

(இ) ஒவ்வொரு பிரிவுகளிலுமுள்ள தகவல்களை தொடர்புபடுத்துதல்

(ஈ) மணல் இருப்பைக் கணிப்பீடு செய்தல்

(உ) கணக்கீடு

(ஊ) முற்பணத்தைத் தீர்த்தல்